புதுக்கோட்டையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் விடுமுறையில் தாயகம் வந்திருக்கும் அயலகத் தமிழர்கள் குடும்பத்தினர் உட்பட மொத்தம் 100 பேருக்கு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட முன்னோடி வங்கிகள் அலுவலர் நந்தகுமார், மாவட்ட நலவாரிய இணை ஆணையர் ராஜ் , தமிழ்நாடு அரசு அமைப்புசாரா தொழிலாளர் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் தெய்வானை பங்கேற்றனர்.

கெஜல்நாயக்கன்பட்டி அரசு பள்ளி மாணவர்களுக்கு அரசின் மிதிவண்டிகள்

க.தேவராஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பத்தூர், செப். 26 - திருப்பத்தூர் மாவட்டம், கந்தலி தெற்கு ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி MLA சிறப்பு அழைப்பாளராக கொண்டு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.

பட்டிக்காடும் பட்டணமும்

பட்டிக்காடு : ஏன் தம்பி; திருப்பதி லட்டுப் பிரச்சினையில், லட்டு செய்யப் பயன்படுத்தப்பட்ட நெய் மாதிரிகள், குஜராத் மாநிலப் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டு,அவற்றில் மீன் எண்ணை, பன்றிக் கொழுப்பு உள்ளிட்டவை கலப்படம் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்களே ?

பட்டணம் : ஆமாமய்யா; திருப்பதிக்கு நெய் விநியோகம் செய்தவர்கள், மச்ச அவதாரமும், வராக அவதாரமும், மஹா விஷ்ணுவின் அவதாரங்கள்தானே; எனவே அவற்றின் எண்ணையையும், கொழுப்பையும் கலப்பது குற்றமில்லை என்று கருதி இருப்பார்களோ !

5வது மண்டல இளைஞர் அணி

அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம்!

மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!

ஈரோடு, செப். 26 - ஈரோடு மாவட்ட பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர், மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் மண்டலம் 5க்கு உட்பட்ட கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர் நீலகிரி மற்றும் மண்டலம் 4ல் உள்ள ஈரோடு தெற்கு மற்றும் ஈரோடு வடக்கு மாவட்டம், மாநகரங்கள் (கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு) மாவட்டங்களின் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, அதுசமயம் மாவட்ட,மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் இளைஞர் அணி கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: 1. கலைஞர் படிப்பகம் அமைக்காத சட்டமன்ற தொகுதிகளில் உடனடியாக கலைஞர் படிப்பகம் அமைக்க ஏற்பாடு செய்தல்.

2. இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல்.

3.இளைஞர் அணி ஆக்கப்பணிகள்.

பேச்சுப் போட்டி பயிற்சிக் கூடம்!

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர், மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் மண்டலம் 5க்கு உட்பட்ட கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர் நீலகிரி மற்றும் மண்டலம் 4ல் உள்ள ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு மாவட்டம், மாநகரங்கள் (கரூர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு ஆகிய பகுதிகளில் உள்ள, தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டவர்களை 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி அளவில் பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு நடைபெற உள்ள பேச்சுப்போட்டி பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சி சென்னிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாகை மீனவ கிராமங்களில் இருந்து

தமிழக வெற்றிக் கழகம் - அ.தி.மு.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

என்.கௌதமன் முன்னிலையில்! இரா.மாரிமுத்து – மகா.குமார் – எம்.ஆர்.செந்தில்குமார் பங்கேற்பு!

நாகை, செப். 26 - நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மற்றும் நம்பியார் நகர் மீனவ கிராமங்களில் இருந்து அ.தி.மு.க. மற்றும் வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த 50 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் விழா நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார்.

நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என். மோகன்தாஸ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மீனவ கிராமங்களான அக்கரைப் பேட்டை யில் இருந்து வெற்றிக் கழக பொருப்பாளர்கள் எல்லையப்பன், ஆனந்த், சேவாபாரதி பகுதியின் இளைஞர் அணி கோபிநாத், கீச்சாங்குப்பம் அ.தி.மு.க.வை சேர்ந்த விஜய் ஆகியோர் தலைமையில் வெற்றிக் கழகம் மற்றும் அ.தி.மு.க.வை சேர்ந்த 50 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இருவண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்து கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில்மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, இந்த சமய அறநிலையத் துறை மாவட்ட அறங்காவலர் நாகரெத்தினம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கமல், நகர் மன்ற உறுப்பனர்கள் ஞானமணி, கமல்நாதன், மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் சுந்தரவடிவேல், குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில்

4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலைகள்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணிகளை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 26 - விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தாதி குளத்தில் இருந்து பொற்குணம் வழியாக சித்தாத்தூர் கடலி செல்லும் சாலையைபிரதம மந்திரி கிராமசடக் யோஜனா திட்டத்தின் கீழ் 3 கோடியே 52 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலையை தரம் உயர்த்தி புதிய தார் சாலை அமைப்பதற்கும் ஈய குணம் முதல் தாதம்பட்டி செல்லும் சாலையைப முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 97 லட்சத்தி 95 ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு பொற்குணம் மற்றும் தாதம்பட்டியில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் கடலி பெருமாள், துறிஞ்சம்பூண்டி சேட்டு, ஈய குணம்சரோஜா அன்பு ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்,

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொற்குணம் , மற்றும் தாதம்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4 கோடியே 50 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலைகள் அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்டஊராட்சிகளின் செயற்பொறியாளர் ராஜா,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவசண்முகம், சையத் முகமது, மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள் முரளி, ரவிச்சந்திரன், ஒன்றிய பொறியாளர்கள் நாராயணமூர்த்தி, தண்டபாணி, ஊராட்சி மன்ற தலைவர்கள்லாவண்யா ராஜேஷ் , விஜயலட்சுமி ஜெயக்குமார், கடலிஊராட்சி மன்ற துணைத் தலைவர் மொபினா யூசப், நிர்வாகிகள் சரவணன், எஸ்.பி. சம்பத், மணிகண்டன்,நிர்மல் குமார்,ஊராட்சி நிர்வாகிகள் ராமச்சந்திரன், ஏழுமலை, பன்னீர், சீனிவாசன், பெருமாள்உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளோடு, 2022 அக்டோபர் 10 அன்று அன்று அமைச்சர் உதயநிதி அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 234/77 ஆய்வுப் பயணத்தைத் தொடங்கினார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 234 தொகுதிகளுக்கும் நேரில் சென்று பள்ளிக் கல்வித்துறை சார்ந்த 77 பொருண்மைகளில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனும் நோக்கில் இந்தப் பெரும் பயணத்தைத் தொடங்கினார். இத்திட்டத்தின் கீழ் 200 ஆவது சட்டமன்றத் தொகுதியில் ஆய்வை நிறைவு செய்துள்ளார். இராமநாதபுரம் தொகுதியில் அமைந்துள்ள மாவட்ட மைய நூலகத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு 200 ஆவது தொகுதியையும் நிறைவு செய்துள்ளார். "200ஆவது ஆய்வை நிறைவு செய்து பயணத்தை மீண்டும் தொடங்கியுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

கங்கைகொண்டானில் விபத்தில் 4 பேர் பலி!

குடும்பத்தினருக்கு நிதி உதவி!

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்

நெல்லை.செப். 26 - நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் ராஜபதி பகுதியைச் சேர்ந்த கண்ணன்(வயது 40) அவரது மாமியார் ஆண்டாள்(வயது 60) மகள்கள் மாரீஸ்வரி(வயது 14) சமீரா (வயது 7)ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர்கள் கடந்த 17 .09.2024 அன்று ஒரு மோட்டார் சைக்கிளில் நெல்லை தச்சநல்லூர் வடக்கு பைபாஸ் ரோட்டில் வண்ணார் பேட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். மணிமூர்த்தீஸ்வரம் விலக்கு அருகே வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக முன்னால் சென்ற லாரியை கடந்து செல்ல முயன்ற போது டேங்கர் லாரி மோதியதில் 4 பேர்களும் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நிதி உதவி வழங்க தனது மகன் பிரபு ராஜ கண்ணப்பனை ராஜபாதி கிராமத்துக்கு அனுப்பி வைத்தார்.பிரபு ராஜ கண்ணப்பன் விபத்தில் உயிரிழந்த கண்ணன் வீட்டிற்கு நேரில் சென்று குடும்பத்தினர்களிடம் ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார்.

அப்போது மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள்,நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ் விருதுநகர் யாதவர் மகாசபை தலைவர் சாத்தூர் முருகேசன்,ஒன்றிய செயலாளர் அருள்மணி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.கா. மணி, தலைமை கழகப் பேச்சாளர் மைக் மணி,மாபுதூர் பஞ்சாயத்து தலைவர் சூழ்ச்சியார், ஆவின் கல்யாணி,மாவட்ட இலக்கிய அணி தலைவர் முனைவர் தங்கப்பாண்டி, ஐயப்பன் ஆகியோர் உடன் சென்றனர்.

திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இதில் கழக மகளிர் தொண்டரணி செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் ப.ராணி கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், மாநில தொண்டரணி துணை செயலாளர், திருப்பூர் வடக்கு, தெற்கு, நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் நா.மாலதி, கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, மாவட்ட அமைப்பாளர்கள் மகளிர் அணி ப.கலைச்செல்வி, தொண்டரணி ஆனந்தி உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள் தொடர்பு (விளம்பரம்)த் துறை

தலைமைச் செயலகம், சென்னை-9

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin) ஓர் ஆண்டு அச்சிடும் பணிக்கு இதே போன்று அரசு அல்லது அரசு சார்ந்த அமைப்புகளின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மட்டும் 08.10.2024 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 08.10.2024 மாலை 4.00 மணிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 38 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 08.10.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த **"மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் பெயரில்"** (பதவியின் பெயரில்) வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) 08.10.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்பனை நிறுத்தப்படும். பணம் நொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செமொதி/3892/ஒப்பந்தப்புள்ளி/2024

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை

தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி பாலக்கோடு மத்திய ஒன்றிய கழக செயலாளர் எஸ்.முனியப்பன் ஏற்பாட்டில் அ.மல்லாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்க்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்வீடி. கோபால், மாரண்டஅள்ளி பேரூராட்சி தலைவர் செயலாளர் வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு 28.09.2024 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்சி), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.